# ஹிந்திக்கு எதிர்ப் புக் கூட்டங்கள்.

## ஓமலூரில் கூட்டம்.

ஓமலூர், செப். 25

ஓமலூரில் தோழர் வெ. சாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் தோழர் கதிரி செட்டியார் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவதைக்கண்டித்துப் பேசினார். அதைத் தழுவி தோழர்கள் எஸ். ஆர். அர்த்தனாரி செட்டியார், காஜிமீரான் சாயபு, நஞ்சய்யன், பேபி முதலியவர்கள் பேசினர். ஹிந்தி கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.